இன்றைக்குப் பெருகியிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, தாய்மார்களுக்கு அதிகமாக வசதிகள் செய்து தரக்கூடிய முறையில் அதை விரிவுபடுத்த அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அங்கே புதிதாக சில மருத்துவமனைப் பகுதிகள் கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

Premature Baby Unit and a new Ante-Natal Ward with 50 beds at a cost of Rs. 2 lakhs. Another proposal for the construction of a new O.P. Block.

புறநோயாளிகளுக்காக 6 லட்சம் ரூபாயில் கட்டடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இடத்திற்குள் எவ்வளவு விரிவுபடுத்த முடியுமோ அந்த அளவிற்கு விரிவுபடுத்து வதற்கான நடைமுறை இருக்கிறது.

மாயூரம் அரசு மருத்துவ மனை

* 187 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தற்போது மாயூரம் அரசினர் மருத்துவமனையினை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விஸ்தரிப்பு இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. புதிய விஸ்த ரிப்புக்கான செயற்குறிப்பு இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இப்பொழுது 32க்கும் அதிகமான படுக்கைகளைக் கொண்ட ஒரு புதிய கட்டடம் கட்டப் படுகிறது என்றாலும், வெளி நோயாளிகளைக் கவனிப்பதற்கான சூழ் நிலையில் அந்த மருத்துவமனை இல்லை என்பதை அரசு அறியுமா? அந்த மருத்துவமனையில் ரத்த சேமிப்பு நிலையம் ஒன்றை உருவாக்கு வதற்கு நீண்டகாலமாக முயற்சி எடுக்கப்பட்டிருந்தும், தேவையான பொருட்கள் கொடுத்தும்கூட, இன்னும் செயல்படுத்தப்படாமல் இருப்பதற்கான காரணத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 32 படுக்கைகள் கொண்ட ஒரு வார்ட் 2 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. 6 படுக்கைகள் கொண்ட தொத்து

1972 டிசம்பர் 15]

நோய்ப் பிரிவு ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது. எக்ஸ்ரே பிளாக் 37 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இப்படி எவை யெவை முன்னுரிமை பெறுகின்றனவோ அவற்றை விரிவுபடுத்துவதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, மாயூரம் நகரம் பர்ஸ்ட் கிரேட் முனிசிபாலிட்டியாக ஆகியிருக்கிறது. ஜனத்தொகை அங்கே அதிகமாகயிருக்கிறது. அந்த மருத்துவமனையை இன்னும் சிறப்பான முறையில் விஸ்தரிப்பதற்கு அரசு தனிக் கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு தனிக் கவனம் செலுத்து வது என்பது மிக எளிதான காரியம். ஆனுல் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டிய இடங்கள் பலவாக வந்துவிடுகின்ற காரணத்தினுல் அவற்றுள் ஒவ்வொரு கட்டத்திலும் முன்னுரிமை தரப்பட வேண்டியிருக்கிறது. மாயூரம் பெரிய நகராட்சியாகி விட்டது என்றும், அங்கே மக்கள் தொகை அதிகமாகிவிட்டது என்றும் தெரிவித்தார்கள். அதற்காகத்தான் அங்கே குடும்பக் கட்டுப்பாடு தீவிர வாரம் நடந்து கொண்டு வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாயூரம் அரசு மருத்துவ மனையில் ஒரு பிளட் பேங்க் அமைப்பதற்காக அங்கேயிருக் கின்ற ரோட்டரி கிளப் போன்ற நிறுவனங்கள் தொகை உதவி செய்து இருக்கின்றன. அந்தத் தொகையும் கொடுக்கப்பட்டு ஒரு ஆண்டு காலத்திற்கும் மேலாக ஆகிறது. மாயூரம், தாலூகாவின் தலைநகராக இருப்பதால் அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

ஊத்துக்கோட்டை அரசு மருத்துவ மனை

* 188 வினு.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், ஊத்துக்கோட்டையில் உள்ள அரசினர் மருத்துவமனைக்குரிய புதிய கட்டடம் அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?